**வரையறுக்கப்பட்ட நெட் வெல்த் செக்யூரீட்டிஸ் கம்பனி - 2020**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

வரையறுக்கப்பட்ட நெட் வெல்த் செக்யூரீட்டிஸ் கம்பனியின் (“கம்பனி”) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகளை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, கம்பனியின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**முக்கியத்துவமான விடயங்கள்**

நிதி கூற்றுக்களின் குறிப்பு 1.2 இனை எனது கவனத்தில் கொள்கின்றேன்.குறிப்பில் கூறப்பட்டதன் படி, தாய் கம்பனியாக பொறுப்பேற்று மற்றும் கட்டுப்படுத்துவது அரசாங்கத்தால் இயக்கப்படும் மஹாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகும்.28 ஆகஸ்ட் 2018 இல் நடத்தப்பட்ட கூட்டத்தில் அமைச்சரவை குழுவானது வரையறுக்கப்பட்ட நெசனல் வெல்த் கோப்பரேசன் கம்பனியினை கலைப்பதற்கும் மற்றும் மத்திய வங்கியின் அனுமதியின் கீழ் வரையறுக்கப்பட்ட நெட் வெல்த் செக்யூரீட்டிஸ் கம்பனியினை வேறு முதலீட்டாளரிற்கு விற்பதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

எனினும்,26 பெப்ரவரி 2020 திகதியிடப்பட்ட புதிய அமைச்சரவை குறிப்பாணை மேலே கூறப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தை வரையறுக்கப்பட்ட நெட் வெல்த் செக்யூரீட்டிஸ்ஸின் 49 சதவீத பங்கு மூலதனத்தை விற்பனை செய்வதற்கும் மற்றும் வரையறுக்கப்பட்ட நெட் வெல்த் செக்யூரீட்டிஸ் இன் மறுகட்டமைப்பு செயற்பாடு முடிவடையும் வரை வரையறுக்கப்பட்ட நெசனல் வெல்த் கோப்பரேசன் கம்பனியினை கலைப்பதனை இடைநிறுத்துவதாகவும் திருத்தியமைப்பதற்கு சமர்ப்பிக்கப்பட்டது.எனினும்,12 ஒக்டோபர் 2020 இல், வரையறுக்கப்பட்ட நெசனல் வெல்த் கோப்பரேசன் கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட நெட் வெல்த் செக்யூரீட்டிஸ் இனை கலைப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது.

மத்திய வங்கியின்(சிபிஎஸ்எல்) பணச்சபை, 31 மே 2020 இல் தொடங்கும் ஆறு மாத காலத்திற்கு வரையறுக்கப்பட்ட நெட் வெல்த் செக்யூரீட்டிஸ்ஸானது முதற்தர வணிகராக வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு தடைவிதித்தது. பின்னர் இரு நிறுவனங்களையும் கலைக்க 2020 ஒக்டோபர் 12 ஆம் திகதி எடுக்கப்பட்ட அமைச்சரவை முடிவுக்கு இணங்க 2020 டிசம்பர் 01 ஆம் திகதி முதல் முதற்தர வணிக உரிமத்தை திரும்ப பெற இயக்குனர் சபை முடிவு செய்தது.இயக்குனர் சபையின் முடிவை கருத்திற் கொண்டு 2020 டிசம்பர் 01 முதற்வணிகரான செயற்படுவதற்கு என்டபில்யூஎஸ்எல் இற்கு வழங்கப்பட்ட நியமனத்தை திரும்ப பெற இலங்கை மத்திய வங்கியின் பணச்சபை தீர்மானித்துள்ளது.இந்த விடயங்கள் தொடர்பாக எனது அறிக்கை மாற்றியமைக்கப்படவில்லை.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகளிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியினை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனியின் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா

என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் கணக்காய்வு அவதானிப்பு

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை கணக்கீட்டு நியமம் 24 இன் படி,நிதிக்கூற்றில் உள்ளடக்கிய காலப்பகுதியில் கம்பனி தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் காணப்பட்டால்,தொடர்புடைய தரப்பினரின் தன்மை அத்துடன் கொடுக்கல் வாங்கல் தொடர்பான தகவல்கள் மற்றும் பயனாளர்கள் புரிந்து கொள்ள தேவையான பொறுப்புகள்,நிதி அறிக்கைகள் தொடர்பில் சாத்தியமான விளைவு உள்ளடக்கிய செலுத்த வேண்டிய மீதிகள் வெளியிடப்பட வேண்டும். மஹாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது வரையறுக்கப்பட்ட நெட் வெல்த் செக்யூரீட்டிஸ் கம்பனியின் | கணக்கீட்டு நியமம் 24 இன் படி, கொடுக்கல் வாங்கல் மற்றும் தொடர்புடைய தரப்பினர் தொடர்புகள் அடுத்த நிதியாண்டில் நிதிக்கூற்றில் காட்டப்படும். | கம்பனி நியமத்துடன் இணங்க வேண்டும். |

தொடர்புடைய தரப்பினர் ஆகும்.கணக்காய்வு அறிக்கை மற்றும் பிற கொடுப்பனவுக்காக நிதியத்துக்கு செலுத்த வேண்டிய ரூபா 5.57 மில்லியன் தொகை நிதிக்கூற்றின் குறிப்புகளில் காட்டப்படவில்லை.

### 1.5.3 கணக்கீட்டு பற்றாக்குறை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ)கம்பனியின்2008/2009,2009/2010,2010/2011, 2011/2012 ,2013/2014 ,2014/2015, 2015/2016 மற்றும் 2017/2018 மதிப்பீட்டு ஆண்டுகளிற்கான முறையே ரூபா 24,136,857, ரூபா 77,382,317,ரூபா 84,378,708, ரூபா 66,181,759,ரூபா 18,288,933, ரூபா 113,687,212 , ரூபா 36,466,487 மற்றும் ரூபா 11,058,742 பெறுமதியுடைய வருமான வரி மதிப்பீடு இறைவரித் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்டது. 2017 இன் 24 ஆம் இலக்க இறைவரி சட்டத்தின் படி, என்டபில்யூஎஸ்எல் வருமான வரிக்கு பொறுப்பாக உள்ளது. எனினும் நிதிக்கூற்றில் செலுத்த வேண்டியவையாக காட்டப்படவில்லை.<br><br>(ஆ)கம்பனியானது 2013 ஆம் ஆண்டில் ரூபா 16,600,601 பெறுமதியுடைய மற்றும் 2014 ஆம் ஆண்டில் ரூபா 58,097,943 பெறுமதியுடைய நிதி சேவைகளின் பெறுமதி சேர் வரிக்கான மதிப்பீட்டு அறிவுறுத்தலை இறைவரித் திணைக்களத்திடமிருந்து பெற்றிருந்தது. எனினும்,இது செலுத்தப்படவில்லை மற்றும் செலுத்த வேண்டியவையாக நிதிக்கூற்றில் காட்டப்படவில்லை. | வருமானவரி மற்றும் வற் வரி சட்டத்தில் உள்ள தெளிவற்ற ஏற்பாடு காரணமாக, கம்பனியின்(என்டபில்யூஎஸ்எல்) வருமானவரி மற்றும் பெறுமதி சேர்வரியானது நடப்பாண்டு(2020) மற்றும் முன்னைய ஆண்டில் கணக்கில் கொண்டு வரப்படவில்லை.இன்னும் இரண்டு வழக்குகள் மேல்முறையீட்டு நீதிமன்றத்திலும் 05 வழக்குகள வரி மேல்முறையீட்டு ஆணைக்குழுவிலும் உள்ளன.கம்பனி (என்டபில்யூஎஸ்எல்) இனை கலைக்க அமைச்சரவை முடிவு செய்ததால் இயக்குனர் குழு அபராதங்களை விட்டுகொடுப்பதன் மூலம் அனைத்து வரி பொறுப்புகளையும் தீர்க்க முடிவு செய்தது.அதன்படி,இயக்குனர் சபை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்துடன் கலந்துரையாடியதுடன் சிஜிஐஆர் தீர்வுகளுக்கு அனுமதி வழங்கியது.எனவே உள்நாட்டு இறைவரி திணைக்களத்துடன் இறுதி ஒப்பந்தம் எட்டப்பட்டவுடன்,அனைத்து வரிகளும் 2021 ஆம் ஆண்டு கணக்கு புத்தகங்களில் சேர்க்கப்படும். | கம்பனி நிதிக்கூற்றில் தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும்.<br><br>கம்பனி நிதிக்கூற்றில் தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 51,127,270 தொகையான இலாபம் ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 224,420,525 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 173,293,255 தொகையான பின்னடைவு அவதானிக்கப்பட்டது. முதலீட்டு

வருமானம் ரூபா 150,164,969 ஆல் குறைவடைந்தமை மற்றும் ரூபா 162,901,677 பெறுமதியான கையாளும் பங்கின் மீள் மதிப்பீட்டில் இருந்து பெற்ற இலாபம் என்பன பின்னடைவுக்கான காரணங்களாகும்.

**2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு பகுப்பாய்வு**

(அ) 2020 ஆம் ஆண்டிற்கான வட்டி செலவு ரூபா 1,309,341 தொகையானது முன்னைய ஆண்டின் வட்டி செலவு ரூபா 119,096,047 தொகையுடன் ஒப்பிடுகையில் கம்பனி வட்டி செலவில் 98.8 சதவீத வீழ்ச்சியை காட்டுகின்றது.

(ஆ) 2020 ஆம் ஆண்டிற்கான கையாளும் பங்கின் மீள் மதிப்பீட்டில் இருந்து பெறும் மூலதன நட்டம் ரூபா 10,887,052 தொகையானது முன்னைய ஆண்டின் கையாளும் பங்கின் மீள் மதிப்பீட்டில் இருந்து பெறும் மூலதன இலாபம் ரூபா 152,014,625 தொகையுடன் ஒப்பிடுகையில் கையாளும் பங்கின் மீள் மதிப்பீட்டில் 107 சதவீத குறைவினை காட்டுகின்றது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மத்திய வங்கியின் நாணயசபை கம்பனியின் உரிமையாண்மை மறுகட்டமைப்பு திட்டத்தை முடிவுறுத்தல் மற்றும் மறுகட்டமைப்பு முடியும் வரை மாதாந்தம் மத்திய வங்கிக்கு அமுலாக்கம் தொடர்பாக செயற்பாடுகளை அறிக்கையிட வேண்டும்,மறுகட்டமைப்பு முடிவடையும் வரை இயக்குனர்கள் சபையில் இருந்து விலகுவதற்கு கட்டுப்பாடு விதித்தல்,கம்பனி எந்த நேரத்திலும் அனைத்து சட்டங்கள்,பிரமாணங்கள் மற்றும் வழிகாட்டல்களுடன் இணங்குதல் மற்றும் அரசாங்க பிணைகளின் இரண்டாம் தர சந்தையில் வினைத்திறனான பங்குபற்றல் மற்றும் தள பரிசோதனையை மேற்பார்வை செய்வதில் திருத்தத்தை அதிகரித்தல் போன்ற நிபந்தனைகளுடன் முதற்தரவணிகராக கம்பனியின் வியாபார மற்றும் செயற்பாடுகளை ஆறு மாத காலத்திற்கு இடை நிறுத்துவைத நீக்கம் செய்தது.<br>எனினும், கம்பனி நிபந்தனைகளுடன் இணங்குவதற்கு தவறிவிட்டது மற்றும் கம்பனி முதற்தர வணிகராக வியாபார நடவடிக்கைகளை நடத்துவதற்கு நீக்கப்பட்டது. | நாட்டில் நிலவும் சூழ்நிலை காரணமாக கம்பனி எதிர்பார்த்த மறுகட்டமைப்பு திட்டத்தை சமர்ப்பிக்க முடியாமையால் கம்பனியால் நிபந்தனைகளுடன் இணங்க முடியவில்லை. | கம்பனி உரிய காலத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |
| (ஆ)2014 இல் இரண்டு தனியார் கம்பனிகளுக்கு செலுத்திய அனுமதிக்கப்படா தரகுக் கட்டணம் ரூபா 19,725,000 தொடர்பில் 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் (சீஐடி) | சிஜடி விசாரணை தொடரும் மற்றும் கம்பனி சிஜடிக்கு வசதியளிப்பதற்கு சட்ட ஆலோசகர் நியமிக்கப்பட்டார். | இந்த விடயம் தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| கம்பனி முறைப்பாடு ஒன்றினைச் செய்திருந்தது.30 செப்ரெம்பர் 2021 வரை தீர்மானம் பெறப்படவில்லை. | | |
| (இ) கம்பனியின் முன்னாள் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் மற்றும் முன்னாள் பிரதான வணிகரால் வரையறுக்கப்பட்ட ரில்லியன் செக்யூரிட்டீஸ் (தனியார்) கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட வோர்ச்சூஅல் இன்வெஸ்ட்மென்ட் அன்ட் ட்ரேடிங் லங்கா (தனியார்) ஆகிய இரண்டு கம்பனிகளின் ஊடாக முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் செய்யப்பட்டதாக கம்பனி வெளிப்படுத்தியது. வரையறுக்கப்பட்ட ரில்லியன் செக்யூரிட்டீஸ் (தனியார்) கம்பனிக்கு எதிராக வழக்கு பதிவு செய்தது 02 நொவம்பர் 2018 இல் தீர்ப்பு வழங்கப்பட்டது.உயர்நீதிமன்ற தீர்ப்பின் படி, கம்பனியானது வரையறுக்கப்பட்ட ரில்லியன் செக்யூரிட்டீஸ்ஸிற்கு ரூபா 53,830,745 தொகையினை 25 ஜீலை 2014 இல் இருந்து ஆண்டுக்கு 14 வீத வட்டியுடன் மற்றும் ரூபா 72,519 தொகையினை 31 ஜீலை 2014 இல் இருந்து ஆண்டுக்கு 14 வீத வட்டியுடன் செலுத்த வேண்டும்.ஆனால்,இது 30 செப்ரெம்பர் 2021 வரை செலுத்தப்படவில்லை. | முடிவுறுத்தல் குழுவின் பரிந்துரை மற்றும் இயக்குனர் சபையின் அனுமதி மற்றும் மஹாபொல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின நம்பிக்கை சபையின் அனுமதியுடன் ரூபா 95 மில்லியன் இறுதி கட்டணமாக செலுத்தப்பட்டது மற்றும் 29 ஜூன் 2021 அன்று பொறுப்புகள் தீர்க்கப்பட்டன. | கம்பனி உரிய காலத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |